**OS NO:215/2010**
**Date:28.11.2019**
**Dw:1 (cross continuation)**
**Name:கோகுலராவ்**
**Address:**

வாதிகள் தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

தாத்தா எத்திராஜுலுநாயுடு அரசு ஊழியர் என்றால் சரிதான். இதைத்தவிர ஊத்துக்காடு கிராமத்திலிருந்த பூர்வீக சொத்திலிருந்தும் வருமானம் வந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.34 தான் எத்திராஜுலு நாயுடு Permanent General Benefit Fund அடமானம் வைத்தற்கான அத்தாட்சி என்றால் சரிதான், இதுமட்டும் அல்ல, இன்னும் இரண்டு ஆவணங்களும் உள்ளது, அதை தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ.34 மற்றும் வா.சா.ஆ.35 தான் அடமானம் வைத்த ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் ஐயிட்டம் 1ல் கண்ட வீட்டு சொத்தின் அடமானம் பத்திரங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.34 மற்றும் வா.சா.ஆ.35 ஆவணங்களான அடமான பத்திரத்தில் என் தாத்தா இறந்து போன எத்திராஜுலு நாயுடு மட்டும் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அடமான பத்திரங்களில் என் தந்தை மற்றும் என் சித்தப்பா ஆகியோர் கையொப்பம் செய்யவில்லை என்றால் போடவில்லை, இது சம்பந்தமான ரத்து செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்திருக்கிறார்கள். தாவா ஐயிட்டம் 1 என் தாத்தா எத்திராஜுலு நாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் என் தாத்தா மட்டும் கையொப்பம் செய்து அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு சொத்து பூர்வீகமாக இருக்கும் பட்சத்தில் ஒரு சொசைட்டியோ, ஒரு வங்கியோ அதன் உரிமையாளர்கள் அனைவரும் கையொப்பம் செய்தால் தான் அடமானம் வைக்கமுடியும் என்று சொன்னால் பூர்வீக சொத்தாக இருந்தாலும், வீட்டில் இருக்கும் பெரியவரின் பெயரில் தான் வரும், அதை குறிப்பிட்டு இருந்தால் தான் வங்கிக்கு தெரியும். பூர்வீகமான சொத்து இருக்கும் பட்சத்தில் அந்த சொத்திற்குரிய அனைவரும் கையொப்பம் செய்ய வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும். என் தாத்தா எத்திராஜுலு நாயுடுவின் தனிப்பட்ட சொத்தாக இருந்ததால் தான் என் தாத்தா தனியாக அடமானம் வைத்தார் என்றால் தவறு. ஊத்துக்காட்டு கிராமத்தில் உள்ள விவசாய

நிலங்களை என் அப்பா உயிருடன் இருந்த காலம் வரைக்கும், என் சித்தப்பா உயிருடன் இருந்த காலம் வரைக்கும் யார் விவசாயம் செய்தார்கள் என்றால் என் அப்பா தான் விவசாயம் செய்தார், சிலவற்றை குத்தகைக்கு விட்டும் பார்த்துக் கொண்டார். என் சித்தப்பா எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை, தோராயமாக 1985 இருக்கும், சரியாக ஞாபகம் இல்லை. என் சித்தப்பா இறந்த பிறகு என் சித்தி மற்றும் அவருடைய பிள்ளைகளின் வயது என்ன என்றால் ஞாபகம் இல்லை. என் சித்தப்பா இறந்த பிறகு தாவா 1வது ஐயிட்ட சொத்தில் என் சித்தி மற்றும் அவர் பிள்ளைகள் இருக்கவில்லை என்றால் சரிதான். என் சித்தப்பாவின் மறைவிற்கு பிறகு ஊத்துக்காடு விவசாய நிலங்களில் வரும் வருமானத்தையும், குத்தகை மூலம் கிடைக்கும் பணத்தையும் என் தந்தை தான் வாங்கி வந்தாரா என்றால் சரிதான், என் தாத்தா தான் வாங்கி வர சொன்னார். தந்தை ஒரு சொத்தை அடமானம் வைத்தால் தந்தையின் சொத்திலிருந்து வரும் வருமானத்தை கொண்டு தந்தையின் கடனை மகன் தான் அடைக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான், அதுமட்டுமல்லாமல் எந்தகடனை பெற்றாலும் அடைக்க வேண்டும். இறந்து போன என் தாத்தா எத்திராஜுலுநாயுடு வைத்த அடமானத்தை அவருக்கு சொந்தமான ஊத்துக்காடு விவசாய நிலங்களில் இருந்து வரும் வருமானத்தை கொண்டு என் தந்தை நாகேஷ்வரராவ் அடைத்தார் என்று சொன்னால் சரிதான், அதோடு சேர்த்து என் தந்தையின் சொந்த வருமானத்தைக் கொண்டும் தான் அடைத்தார். பி.வா.சா.ஆ.1, முதல் பி.வா.சா.ஆ.5 வரையில் உள்ள ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் ஊத்துக்காடு கிராமத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான், இந்த சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் இருக்கிறது. மேற்படி சொத்துக்கள் எல்லாம் என் தாத்தா எத்திராஜுலுநாயுடுவின் தந்தை வை.ராகவல்நாயுடு பெயரில் கண்டுள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். வை.ராகவல்நாயுடு மகன்கள் கோவிந்தநாயுடு மற்றும் எத்திராஜுலுநாயுடு தந்தைக்கு சொந்தமான சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்களா என்றால் பிரித்துக் கொண்டதற்கான ஆவணங்கள் பார்க்கவில்லை, இது குறித்து எனக்கு தெரியாது. கோவிந்தநாயுடுக்கு பாத்தியபட்ட சொத்துக்களை அவர் மறைவிற்கு பிறகு அவர் மனைவி பூலோகம்மாள் அடைந்தார் என்றால் அடைந்திருக்கலாம், அது குறித்து எனக்கு தெரியாது, கோவிந்தநாயுடு சொந்தசொத்தும், பூலோகம்மாள் வாங்கிய சொத்தும் உள்ளது. வை.ராகவல்நாயுடு மகனான எத்திராஜுலு நாயுடுக்கு கிடைக்கப்பட்ட சொத்துக்கள் அவர் ஆயுள் காலம் வரைக்கும் அனுபவித்து வந்தார் என்றால்

சரிதான், அவருடன் சேர்ந்து என் அப்பா நாகேஷ்வரராவ் மற்றும் என் சித்தப்பா மதனகோபாலும் சேர்ந்து அனுபவித்து வந்தார்கள்.

(வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது)